# இந்த விஷயத்திலும், உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன். தீவிரமாய் அங்கே ஓடி தப்பித்துக்கொள். ஆதி 19:21/22

**சாட்சியாய் ஜீவிப்பாயா ?**

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

கடைசியாக கர்த்தரிடத்தில் நீங்கள் கெஞ்சி, பிச்சையாகக் கேட்டுக் கொண்டிருந்த இந்த விஷயத்திலும் **“உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன்”** என்று வாக்களிக்கிறார்.

நம்முடைய தேவன் எவ்வளவு அன்புள்ளவர்.

**சங்கீதக்காரன் சொல்கிறார் : சங்கீதம் 145 : 19**

கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுடைய, விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.

சகோதரனே, சகோதரியே.

‘‘உன்னுடைய விருப்பத்தின்படி கர்த்தர் செய்கிறார்.’’

**லோத்தும் தூதரும்**

லோத்து சோதோமின் வாசலிலே, சாயங்காலத்திலே உட்கார்ந்திருக்கிறார். இரண்டு தூதர்கள் வருகிறார்கள். வீதியிலே இராத் தங்குவோம் என்கிறார்கள். லோத்து மிக வருந்தி அழைத்து, வீட்டினுள்ளே தூதர்களை தங்க வைத்து விருந்தளிக்கிறார். ஊரிலுள்ளவர்கள் லோத்து வீட்டை சூழ்ந்து, இரண்டு மனுஷரை வெளியே கொண்டு வா என்று கலகம் பண்ணுகிறார்கள். லோத்து ஊராரிடம் தன்னுடைய இரண்டு மகளுக்கு நீங்கள் தீமை செய்தாலும் பரவாயில்லை. விருந்தினராகிய இரண்டு தூதருக்கும் தீமை செய்ய வேண்டாம் என பரிந்துரைக்கிறார். ஊராரோ, உனக்கு அதிகப் பொல்லாப்பு செய்வோம் என்று சொல்லி, லோத்துவை நெருக்கி, கதவை உடைக்க நெருங்குகிறார்கள்.

ஆனால், தூதரோ லோத்தை வீட்டிற்குள் இழுத்து, கதவை அடைத்து, ஊராருக்கு குருட்டாட்டம் பிடிக்கச் செய்கிறார்கள்.

இவ்வாறாக, லோத்தை இந்தப் பெரிய தீங்கிலிருந்து, முதலாவது தூதர்கள் மீட்டெடுக்கிறார்கள்.

தூதர்கள் லோத்தை நோக்கி; இன்னும் உனக்கு அருமையானவர்களை அழைத்துக் கொண்டு இந்த வீட்டை விட்டு ஓடிப் போ என்கிறார்கள்.

ஏனெனில், சோதோமை அழிக்கப் போகிறேன் என்கிறார்கள். ஆனால் லோத்து தாமதிக்கிறார். லோத்து தாமதிக்கையில், கர்த்தர் லோத்து மேல் வைத்த **இரக்கத்தினால்** இரண்டு தூதரும், லோத்து, மனைவி, இரண்டு மகள் கையைப் பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய்விட்டு, **மலைக்கு ஓடிப்போ** என்கிறார்கள்.

லோத்து தூதரைப் பார்த்து, மலைக்கு என்னால் ஓடிப் போக முடியாது. பக்கத்தில் இருக்கிற கிராமத்திற்கு ஓடிப் போகிறேன் என்கிறார். அப்பொழுது தூதன் லோத்தை நோக்கி, ‘‘**இந்த விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன்.**’’ என்றார்.

கர்த்தருக்குப் பிரியமானவரே,

எத்தனையோ வேண்டுகோளுக்கு தேவன் உங்களுக்கு அற்புதமாக பதிலளித்தார். இப்பொழுது நீர் கேட்பது கிராமம்.

**தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.**

இந்த விஷயம், உமக்கு மலையைப் போல் தெரிகிறது. ஆனால் தேவனுக்கோ பனியைப் போல் தெரிகிறது.

ஊராரிடமிருந்து லோத்துவையும், அவன் குடும்பத்தையும் முதலாவது தேவன் காத்தார். இரண்டாவது பட்டணத்தோடு அழியாதபடி காத்தார். மூன்றாவதாக, தூரமாக ஓட முடியாமல் இருந்த லோத்து குடும்பத்தை, காக்கும்படி பக்கத்து கிராமத்தை அழியாமல், அங்கே போய் அடைக்கலம் புகும்படி கிருபை செய்தார்.

மூன்றாவதாக, **இந்த விஷயத்திலும் தேவன் லோத்துவுக்கு அநுக்கிரகம்** செய்தார்.

வாக்குத்தத்தத்தை வாஞ்சையோடு வாசிக்கும் அன்பரே,

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். **‘சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் உங்களுக்குச் சொல்கிறேன்’**

நீங்கள் ஜெபித்து வருகிற, கண்ணீரோடு தேவனோடு போராடி வருகிற, வாஞ்சையோடு எதிர்பார்த்து வருகிற, **‘இந்த விஷயத்திலும் தேவன் உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணுகிறார்.’** அல்லேலுயா !

தேவனுக்கு சாட்சியாய் ஜீவிப்பாயா ? நீ உன், வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தனவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி.

நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம். நீயும் சேவிப்பாயா ! நீயும் ஜீவிப்பாயா ?

**இந்த விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன். ஆமென். வெற்றி ஆனதே.**